பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

11 03 2026 WEDNEDSDAY 7 15 PM

ஆகாஷவாணி - செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்புவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்

2. மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லாவின் நேர்மை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. மக்களை திசை திருப்பும் வகையிலான விளம்பரங்களை தடை செய்வற்கு மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் புதிய விதிமுறைகளை அறிவித்துள்ளது.

4. சத்தீஸ்கர் மாநிலத்தில் 108 நக்□ லைட்டுகள் இன்று சரணடைந்தனர்.

5. உலக கோப்பை மகளிர் ஹாக்கி தகுதிச் சுற்று போட்டியில், இந்தியா - Wales அணிகளுக்கு இடையேயான போட்டி ஹைதராபாதில் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

>>>>><<<<<

தமிழக மக்கள் ஆட்சி மாற்றத்தை விரும்புவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தமிழகத்தின் திருச்சியில், தேசிய ஜனநாயக கூட்டணியின் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

ஒரு குடும்ப ஆட்சிக்கு முடிவு கட்ட வேண்டும் என்று தமிழக மக்கள் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அனைத்து குடும்பங்களுக்கான வளர்ச்சியை, தேசிய ஜனநாயக கூட்டணியால் மட்டுமே உறுதி செய்ய முடியும் என்பதை தமிழக மக்கள் உணர்ந்திருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

தமிழகத்தின் வளர்ச்சியில் தமது அரசு எப்போதும் தனிக்கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

தமிழகத்தைச் சேர்ந்த திரு. சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு குடியரசுத் துணைத்தலைவர் பதவியை வழங்கியதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மதுரை விமான நிலையத்திற்கு சர்வதேச விமான நிலைய அந்தஸ்து வழங்குவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதாகவும் பிரதமர் கூறினார்.

*(சவுண்ட் பைட் - பிரதமர் (1) 50 செகண்ட்ஸ்)*

*பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, தமிழகத்தின் வளர்ச்சிக்கு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.*

*மத்தியில் திமுக - காங்கிரஸ் கூட்டணி ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது, ஒதுக்கப்பட்ட நிதியை விட பன்மடங்கு கூடுதலான நிதியை தமது அரசு ஒதுக்கியுள்ளதாக திரு. நரேந்திர மோடி கூறினார்.*

*(சவுண்ட் பைட் - பிரதமர் (2) 50 செகண்ட்ஸ்)*

*தமிழகத்தில் தற்போது நடைபெற்று வரும் ஊழல் முறைகேடுகள் மூலம் பெறப்படும் பணம், ஒரு குடும்பத்திற்கு செல்வதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.*

*தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளையும் நிறைவேற்ற திமுக அரசு தவறிவிட்டதாக பிரதமர் குறை கூறினார்.*

*>>>>><<<<<*

*மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லாவை பதவி நீக்கம் செய்யக்கோரி எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த தீர்மானத்தின் மீதான விவாதம் இன்றும் மக்களவையில் நடைபெற்றது.*

*விவாதத்திற்கு பதில் அளித்து பேசிய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா, மக்களவைத் தலைவரின் நேர்மை குறித்து எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்புவது துரதிர்ஷ்டவசமானது என்று கூறினார்.*

*கடந்த நாற்பது ஆண்டுகளில் இதுபோன்று அவைத் தலைவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வரப்படவில்லை என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.*

*மக்களவைக்கும் நாடாளுமன்ற அரசியலுக்கும் தலைகுனிவை ஏற்படுத்தும் வகையில் எதிர்க்கட்சிகளின் நடவடிக்கை அமைந்திருப்பதாக அவர் குற்றம் சாட்டினார்.*

*மக்களவைத் தலைவர் எந்த ஒரு அரசியல் கட்சியும் சாராமல் நடுநிலையுடன் அவையை நடத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.*

பிஜேபியோ, தேசிய ஜனநாயக கூட்டணியோ மக்களவைத் தலைவருக்கு எதிராக எப்போதுமே நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வந்ததில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லாவின் நேர்மை, சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது என பிஜேபி சார்பில் தான் உறுதி செய்வதாகவும் திரு. அமித்ஷா தெரிவித்தார்.

>>>>><<<<<

மேற்காசிய போர் சூழல் குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கள், பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சர் Jean Noel Barrot உடன் ஆலோசனை நடத்தினார்.

இந்த தகவலை டாக்டர் ஜெய்சங்கர் அவரது சமூக வலை தளத்தில் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

தேசிய அளவிலான விளையாட்டுத்துறையை மேம்பாட்டுக்கு லட்சுமிபாய் தேசிய உடற்கல்வி நிறுவனம் சிறப்பான பங்களிப்பை அளிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று இக்கல்வி நிறுவனத்தின் பொதுக்குழு கூட்டத்தில் உரையாற்றிய திரு மாண்டவியா, தேசிய அளவில் விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கவும், அவர்களின் செயல் திறனை மேம்படுத்தவும் ஆலோசனைகளை வழங்கினார்.

பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர்கள் மாணவர்களின் திறமையை ஆரம்பத்திலேயே கண்டறிந்து அவர்களை ஊக்கப்படுத்தி மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

உடல் தகுதி கலாச்சாரம், உடற்கல்வி குறித்த விழிப்புணர்வு, விளையாட்டுகளில் பங்கேற்பு ஆகியவற்றில் இளைஞர்களை ஊக்குவிக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

லட்சுமிபாய் தேசிய உடற்கல்வி நிறுவனம் உடற்கல்வி, விளையாட்டு மேம்பாடு உள்ளிட்டவற்றுக்கான கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும் என்றும் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

>>>>><<<<<

உண்மைக்கு புறம்பான தகவல்களுடன் மக்களை திசை திருப்பும் வகையில் விளம்பரங்களை வெளியிடுவதற்கு மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் விதிமுறைகளை அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் மின்னணு ஊடகங்களில் வெளியாகும் அனைத்து விளம்பரங்களும் விதிமுறைகளுக்கு உட்பட்டு தயாரிக்கப்பட்டுள்ளதா? என்பதை விளம்பர நிறுவனங்கள் உறுதி செய்யவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது.

விளம்பரம் செய்யப்படும் பொருட்களின் தரம் மற்றும் பயன்பாடு குறித்து அதிகளவில் மிகைப்படுத்தி வெளியாகும் விளம்பரங்கள் தடை செய்யப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளது.

நுகர்வோர் உரிமைகளை பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் மிகைப்படுத்தப்பட்ட விளம்பரங்களை, வர்த்தக முறைகேடு நடவடிக்கையாக கருதி நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைக்காட்சிகளில் வெளியாகும் விளம்பரங்கள் விதிமுறைகளை மீறியிருப்பின் அந்த தொலைக்காட்சி நிறுவனத்தின் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

நுகர்வோரை கவரும் வகையில் போலியான நம்பிக்கையை ஏற்படுத்தும் விளம்பரங்கள், குழந்தைகளை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்படும் விளம்பரங்கள், குழந்தைகளை தத்தெடுத்தல் மற்றும் வாடகைத்தாய் தொடர்பான விளம்பரங்கள் முற்றிலுமாக தடை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

சத்தீஸ்கர் மாநிலத்தில் 108 நக்சலைட்டுகள் இன்ற காவல் துறையினரிடம் சரணடைந்தனர். இவர்களில் 44 பேர் பெண்கள்.

பஸ்டர் பகுதியில் உள்ள ஜெகதர்பூர் காவல்துறை மண்டல தலைமையகத்தில் மூத்த காவல்துறை அதிகாரிகள் முன்பு இவர்கள் இன்று சரணடைந்தனர்.

இவர்கள் கொடுத்த தகவலின் பேரில் பல்வேறு இடங்களில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களையும், காவல் துறையினர் பறிமுதல் செய்தனர்.

*ஏழு ஏ கே 47 ரக துப்பாக்கிகள், 4 எல் எம் ஜி ரக துப்பாக்கிகள், கன்னிவெடி சாதனங்கள் உள்ளிட்ட 101 ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.*

*அவர்களிடமிருந்து 3 கோடியே 60 லட்சம் ரூபாய் ரொக்கம், ஒரு கிலோ தங்கம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.*

*கடந்த 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இதுவரை மொத்தம் 2 ஆயிரத்து 625 நக்சலைட்டுகள் சரணடைந்துள்ளனர்.*

>>>>><<<<<

*கூட்டுறவுத்துறை சார்பில் செயல்படுத்தப்பட்டுள்ள பாரத் டாக்ஸி, பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாக அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு. Krishan Pal கூறியுள்ளார்.*

*மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், நாடுமுழுவதும் ஓட்டுநர்களின் வருவாயை அதிகரிக்க இது உதவி வருவதாக குறிப்பிட்டார்.*

*பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான பல்வேறு அம்சங்கள் பாரத் டாக்ஸியில் இடம்பெற்றிருப்பதாகவும் அவர் கூறினார்.*

*குறைந்த செலவில் தரமான டாக்ஸி சேவையை இது உறுதி செய்துள்ளதாகவும் திரு. Krishan Pal தெரிவித்தார்.*

>>>>><<<<<

*உலகின் மிகப் பெரிய ஜவுளிக் கண்காட்சி புதுதில்லியில் நடைபெறவுள்ளதாக மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.*

*இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த அவர், ஜூலை மாதம் 14ஆம் தேதி தொடங்கி 17ஆம் தேதிவரை இந்த கண்காட்சி நடைபெறவுள்ளதாக குறிப்பிட்டார்.*

*140 நாடுகளைச் சேர்ந்த ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்பார்கள் என்றும் அமைச்சர் கூறினார்.*

>>>>><<<<<

பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டில், மத்திய அரசு தனிக்கவனம் செலுத்தி வருவதாக அத்துறைக்கான மத்திய இணையமைச்சர் திருமதி. சாவித்ரி தாக்கூர் கூறியுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக அமெரிக்கா சென்றுள்ள அவர், நியூயார்க்கில், மகளிர் பாதுகாப்பு தொடர்பாக நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

மகளிர் மேம்பாட்டிற்காக மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையும் அமைச்சர் பட்டியலிட்டார்.

>>>>><<<<<

பிரிட்டிஷ் நாடாளுமன்ற மேலவையில் உயர்குடியில் பிறந்தவர்கள் வம்சாவழியாக இடம்பெறுவதை தடை செய்வதற்கான சட்டம் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ளது.

பிறப்பின் அடிப்படையில் மேலவை உறுப்பினராக நியமனம் செய்யும் நூற்றாண்டு கால நடைமுறை தற்போது முடிவுக்கு வந்துள்ளதாக பிரிட்டிஷ் அரசு கூறியுள்ளது.

ஹவுஸ் ஆப் லார்ட்ஸ் அவையில் நேற்று நிறைவேற்றப்பட்ட இதற்கான மசோதாவுக்கு இன்று நாடாளுமன்றத்தின் ஒப்புதல் கிடைத்துள்து.

>>>>><<<<<

உலக கோப்பை மகளிர் ஹாக்கி தகுதிச் சுற்று போட்டியில், இந்தியா - Wales அணிகளுக்கு இடையேயான போட்டி ஹைதராபாதில் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

>>>>><<<<<

டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரிவசை பட்டியலின் பேட்டிங் பிரிவில் இந்தியாவின் அபிஷேக் சர்மா தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

Ishan Kishan இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

>>>>><<<<<

ஆசிய கோப்பை இரண்டாம் கட்ட வில்வித்தை போட்டி, தில்லியில் அடுத்த ஆண்டு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

*இப்போட்டி, 22 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் நடைபெறுகிறது.*

*>>>>><<<<<*

*மேற்காசியாவில் நிலவும் சூழலை கருத்தில் கொண்டு, அஹமதாபாதில் அடுத்த மாதம் நடைபெறுவதாக இருந்த ஆசிய பளு தூக்கும் சாம்பியன் போட்டி, மே மாதத்திற்கு ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*அடுத்த மாதம் 1ஆம் தேதி தொடங்கி 10ஆம் தேதிவரை நடைபெறுவதாக இருந்த இப்போட்டி, தற்போது மே மாதம் 12 ஆம் தேதி தொடங்கி 17ஆம் தேதி வரை நடைபெறும் என்று ஆசிய பளு தூக்கும் சம்மேளனம் கூறியுள்ளது.*

*>>>>>END<<<<<*